இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 127 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 02 – புதன்கிழமை 17 டிசம்பர் 2025 – மதுரை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 127: Thiruvalluvar Year - 2056 - Margazhi 02 - Wednesday 17 December 2025 - Madurai 12 Pages ₹ 5.00

### சோனியா, ராகுல் மீதான அமலாக்கத்துறை

## குற்றப்பத்திரிகையை நிராகரித்த நீதிமன்றம்!

### நேஷனல் ஹெரால்டு வழக்கில் டெல்லி நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, டிச. 17 - நேஷனல் ஹெரால்டு வழக்கில், காங்கிரஸ் தலைவர்கள் சோனியா மற்றும் ராகுலுக்கு எதிராக அமலாக்கத் துறை தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையை ஏற்க டெல்லி நீதிமன்றம் மறுத்து விட்டது.



காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்திக்கு எதிராக நேஷனல் ஹெரால்டு வழக்கில், அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, அமலாக்கத் துறை தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையை நிராகரிப்பதாக நீதிமன்றம் தெரிவித்தது.

நேஷனல் ஹெரால்டு விவகாரத்தில் டெல்லி காவல்துறை அண்மையில் தான் முதல் தகவல் அறிக்கையே பதிவு செய்திருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி, அமலாக்கத் துறை சார்பில் இதுவரை நடைபெற்ற விசாரணை தனிநபர் அளித்த புகாரின் அடிப்படையிலானது என்றும் இதனை ஏற்க முடியாது என்றும் தெரிவித்தார்.

### 100 நாள் வேலை திட்டம்; மகாத்மா காந்தி பெயர் நீக்கம் –

## தி.மு.க. எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு!

### தேசத் தந்தையை ஒன்றிய அரசு அவமதித்துவிட்டதாக குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 17 - 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கும் புதிய மசோதாவுக்கு மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர். பாலு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதன் மூலம் தேசத் தந்தையை ஒன்றிய அரசு அவமதித்துவிட்டதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.



100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கும் புதிய மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நோட்டீஸ் அளித்திருந்தார்.

மக்களவையில் தாக்கல் செய்யப்படும் இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே தி.மு.க. கடுமையாக எதிர்க்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மக்களவை நேற்று கூடியதும் புதிய 100 நாள் வேலை திட்ட திருத்த மசோதாவுக்கு டி.ஆர்.பாலு உள்ளிட்ட தி.மு.க. எம்.பி.க்கள் எழுந்து நின்று தங்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பேசிய டி.ஆர்.பாலு, திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கி, தேசத் தந்தையை ஒன்றிய அரசு அவமதித்துவிட்டதாக குற்றம் சாட்டினார்.

### அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் – இஸ்லாமியர்களின் நலனுக்காக

# ரூ.39.20 கோடியில் “தமிழ்நாடு ஹஜ் இல்லம்”!

## கட்டுமானப் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, டிச. 17 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2025) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற விழாவில், ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள “தமிழ்நாடு ஹஜ் இல்லம்” கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2025) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள “தமிழ்நாடு ஹஜ் இல்லம்” கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், எஸ்.எம்.நாசர், தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் சமது, நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, ஜெ. முகம்மது ஷா நவாஸ், அப்துல் வகாப், கே.எஸ். மஸ்தான், திருமதி வரலட்சுமி மதுசூதனன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இஸ்லாமியப் பெருமக்கள் நல்வாழ்விற்காக அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள்!**

இஸ்லாமியப் பெருமக்கள் வேலைவாய்ப்பு பெற்று வாழ்வில் ஏற்றம் பெறும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 சதவீதம் தனி இடஒதுக்கீடு வழங்க சட்டம் இயற்றி இடஒதுக்கீடு வழங்கினார். மேலும், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைத்ததோடு, இஸ்லாமியப் பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் திராவிட மாடல் அரசு, இஸ்லாமியப் பெருமக்களின் நல்வாழ்விற்காக அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் ஆதரவற்ற, கைம்பெண்கள் மற்றும் வயதான முஸ்லிம் பெண்களுக்கு நிதி உதவி வழங்குதல், பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பிற்காக மானியம் வழங்கும் திட்டம், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குதல், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு ஆண்டு நிர்வாக மானியம் 2.50 கோடி ரூபாய் வழங்குதல், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன்கள் வழங்குதல், உலமாக்களுக்கு மாதம் ரூ.1,200/ ஓய்வூதியம், உலமா ஓய்வூதியதாரர் இறந்தபிறகு, அவரின் குடும்பத்தினருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், தொன்மையான 6 தர்காக்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.5 கோடி நிதி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிர்வாக மானியம் ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது,

1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியருக்கு தலா ரூ.1,000/ கல்வி உதவித் தொகை, தமிழ்நாட்டில் இருந்து ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ மானியம் வழங்குதல், மாவட்ட காஜிகளுக்கு மாதந்தோறும் 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்குதல், இஸ்லாமியர் அடக்கம் செய்யும் இடமான கபர்ஸ்தான்களுக்கு புதிதாக சுற்றுச் சுவர் மற்றும் பாதை அமைக்க நிதியுதவி போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**தமிழ்நாடு ஹஜ் இல்லம்!**

அந்த வகையில், ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக - சென்னை விமான நிலையம் அருகில், தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 3.3.2025 அன்று நடைபெற்ற நாகப்பட்டினம் மாவட்ட அரசு விழாவில் அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் விமானம் புறப்படுவதற்கு ஒரு நாள் முன்னர் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அலுவலகத்தை அணுகி பயண நடைமுறைகளை நிறைவேற்றி விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்கு ஏதுவாக சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டுமானப் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இப்புதிய தமிழ்நாடு ஹஜ் இல்லம் அடித்தளம் உட்பட நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இக்கட்டடத்தின் அடித்தளத்தில் வாகன நிறுத்துமிடம், தரைத் தளத்தில் ஹஜ் அலுவலகம், வரவேற்பறை, கூட்ட அறை, ஹஜ் பயணிகளின் உடைமைகளை பாதுகாக்கும் அறை, முதல் தளத்திலிருந்து நான்காவது தளம் வரை சுமார் 400 ஹஜ் பயணிகள் தங்கும் வகையில்

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் – டிச. 29 அன்று பல்லடத்தில்

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

1.31 கோடி மகளிருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்’, கல்வி கற்கும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’, வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான ‘தோழி விடுதி’, இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் முன்னிலையில் கரூர் மாவட்டக் கழகச் செய லாளர் வி.செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ., வரவேற்பில்;

வருகிற 29.12.2025 திங்கட்கிழமை, மாலை 4.00 மணி அளவில், திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெற உள்ளது.

இம்மாநாட்டினை அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, மா.மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ், மற்றும் அரசுக் கொறடா கா.ராமச்சந்திரன் மாவட்டச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்களான மேயர் என்.தினேஷ்குமார், என்.நல்லசிவம், தோப்பு வெங்கடாசலம், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச்செல்வன், கே.எம். ராஜு, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி., கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈஸ்வரசாமி, கே.இ.பிரகாஷ், கணபதி ப.இராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், பெ.இராமலிங்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, இரா.மாணிக்கம் ஆகியோர் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்கிறார்கள்.

நிறைவாக, திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ், எம்.எல்.ஏ., நன்றியுரையாற்றுகிறார்.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600018.
நாள் : 16.12.2025.